**17.08.2022**

**OS.No. 15/2021 PW : 2, திரு. வெங்கடேசன்**

**குறுக்கு விசாரணை...**

நான் குடியிருக்கும் தெருவில் வாதி மற்றும் பிரதிவாதி குடியிருக்கிறார். அவர்களின் வீடுகள் அருகே இருக்கிறது. எனக்கு சாட்சி சொல்ல அழைப்பானை வரவில்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன சொல்லப்பட்டுள்ள என்று எனக்கு தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் சுமார் 15 நாட்களுக்கு முன்னார் கையொப்பம் போட்டேன். நான் சாட்சி கையொப்பம் போட்டது சம்பந்தமாக முதல் விசாரணை சொல்லப்பட்டுள்ளது. முதல் விசாரணை வாக்குமூலத்தை தயார் செய்யும் போது இருந்தேன். தாவா சொத்தின் சர்வே எண்ணோ, நான்குமால்களோ எனக்கு தெரியாது. நரசம்மாள் அவரது இரண்டு பிள்ளைகளுக்கு சொத்தை எழுதி கொடுப்பதாகவும் அவர்கள் இறந்த பின்னர் பேரபிள்ளைகளுக்கு சொத்து சேர வேண்டும் என்று ஆவணம் எழுது வதாகவும் சொன்னார். நான் அதில் சாட்சி கையொப்பம் போட்டேன். பிரதிவாதிக்கு இன்றுவரை குழந்தைகள் இல்லை என்று சொன்னால் சரிதான். நரசம்மாள் என்பவர் வழக்கறிஞரை வரவழைத்து உயில் எழுதினார். உயில் எழுதிய காலத்தில் நரசம்மாள் படுத்த படுக்கையாக இல்லை. உட்கார்ந்திருந்தார் அவரால் நடக்கமுடியாது. வழக்கறிஞரின் பெயர் எனக்கு தெரியாது. அந்த வழக்கறிஞரை 1ம் வாதி தான் அழைத்து வந்தார். நரசம்மாள் கைரேகை வைத்தார். அது இடது கையா, வலதுகையா என்று எனக்கு தெரியாது. கைரேக்கு கீழ் பெயரை

எழுதினார்கள். உடல்நிலை சரியில்லாமல், படுத்த படுக்கையாக நரசம்மாள் இருந்தார் என்றும் அவர் உயில் எழுதி வைக்க எண்ணவில்லை என்றும் சொத்தை அபகரிக்கப்பதற்காக நானும், 1ம் வாதியும் சேர்ந்து போலியாக உயிலை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் வாதி சொல்லி தான் வழக்கறிஞர் என்று தெரியும். அவர் திருவள்ளூரை சேர்ந்தவர் என்று சொன்னார்கள். 1 ஏக்கர் 30 சென்ட்-ஐ உயில் எழுதி வைத்ததாக ஞாபகம். 11.12.2018 அன்று நரசம்மாள் உயிலை எழுதினார். 1ம் வாதியின் வீட்டில் வைத்து உயில் எழுதப்பட்டது. நரசம்மாள் இறக்கும் வரை பிரதிவாதியின் வீட்டில் தான் குடியிருந்தார் என்றும் 1ம் வாதியின் வீட்டில் அவர் இல்லை என்றால் சரியல்ல. நரசம்மாள் ஏற்கனவே ஒரு உயிலை எழுதி பதிவு செய்து வைத்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் உயிலை நரசம்மாள் எழுதவில்லை என்றும் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்கிறது என்றும் ஆகவே அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.